2010 நவம்பர் 10]

மாணவர்கள் பயணிக்கிறார்கள்; அந்த மாணவர்களின் இருப்பிடம் எங்கே இருக்கிறது என்பதையெல்லாம் கண்டறிந்து, முதலில் 50 பேருந்துகள் மாணவர்களுக்காக இப்பொழுது சென்னை மாநகரத்திலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கிடையில் நமது துறையின் சார்பாக அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியப் பெருமக்களிடம், தமிழ்நாடு முழுவதும் ஒரு கணக்கெடுப்பு நடத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. குறிப்பாக எந்தெந்தப் பகுதிகளுக்கு, எந்தெந்த நேரத்தில், மாணவர்கள் தங்குதடையின்றி பள்ளிக்குச் செல்வதற்காகப் பேருந்துகளை விடவேண்டுமென்று அவர்கள் கணக்கெடுப்பு எடுத்துத் தந்த பிறகு, மாணவர்களுக்காக சென்னையில் இப்பொழுது எப்படி செய்யப்பட்டிருக்கிறதோ, அதேபோன்று பல மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் இந்தத் துறையின் சார்பாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

சிகிச்சைப் பிரிவுகள்

***57060—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதயம், நரம்பியல், சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதயம், நரம்பியல், சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகள் நிதி ஆதார அடிப்படையில் உரிய தருணத்தில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2010 நவம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.*

திருமதி ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மக்கள் ஏராளமானோர் கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதயம், நரம்பியல், சிறுநீரகப் பிரிவுகள் இல்லாததால், ஏழை எளிய உழைப்பாளி மக்கள் திருநெல்வேலி மற்றும் திருவனந்தபுரம் மருத்துவமனைகளுக்குச் சென்று அலைய வேண்டியிருக்கிறது.* Dialysis *உட்பட பல்வேறு விலையுயர்ந்த மருத்துவக் கருவிகள் இருந்தும், இதுபோன்ற சிறப்புப் பிரிவுகள் இல்லாததாலும்,* Trained Technicians *இல்லாததாலும் பயன்பாட்டுக்கு வராமல் உள்ளன. அண்மையில் 4* Dialysis *கருவிகள் கொண்டுவரப்பட்டு, அவற்றில் ஒன்று திருநெல்வேலிக்கும், மற்றொன்று மதுரைக்கும் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. கடந்த வாரம் சுகாதாரத் துறைச் செயலாளர் அவர்கள் ஆய்வு செய்தபோது, உடனடியாக அந்தக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அதற்குரிய பிரிவுகளைத் தொடங்குவதாக அறிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே இருக்கக்கூடிய* M.D. *மருத்துவர்களை வைத்தேனும் இருக்கக்கூடிய* machine—*களைப் பயன்படுத்த* trained Technician—*களை நியமித்து இருதயம், நரம்பியல், சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகளை உடனடியாகச் செயல்படுத்த ஆவன செய்யப்படுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, 600 படுக்கை வசதியுடன் அவசர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் அறுவை அரங்குகள் உள்ளிட்ட மருத்துவக் கல்லூரிக்கான இதர கட்டமைப்பு வசதிகளுடன் 5 ஆண்டுகால* M.B.B.S. *மருத்துவ மாணவர்களின் மருத்துவக் கல்விக்காக துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்திய மருத்துவக் குழு நடைமுறை விதிகளின்படி*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 10]

இந்திய மருத்துவக் குழுமத்தில் நிரந்தர அங்கீகாரம் பெற்ற பின்னரே முதுநிலைப் பட்டப்படிப்பு பிரிவுகள், உயர் சிகிச்சைப் பிரிவுகளின் துறைகள் துவங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்பொழுது கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரிக்கு 2009 ஆம் ஆண்டில்தான் இந்திய மருத்துவக் குழுமத்தின் நிரந்தர அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. முதுநிலைப் பட்டப்படிப்புகளின் பிரிவுகள் துவங்கப்படும்போது அவற்றுடன் இருதயவியல் துறை, சிறுநீரகவியல் துறை, நரம்பியல் துறை ஆகியவற்றினையும் துவங்குவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள், பணியிட ஒப்பளிப்பு ஆணைகள் ஆகியவை ஏற்படுத்தப்படும். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் dialysis பிரிவுகளுக்கு சிறப்பு மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அது உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று கூறி இருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவதோடு பொதுவாக ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரியில் மருத்துவர்கள் சரியான முறையில் வந்து பொதுமக்களுக்கு சிகிச்சை கொடுப்பதில் பலவீனம் என்பது தொடர்ந்து இருந்து வருகிறது. அதேபோன்று தலையில் காயம்பட்டு வருபவர்களுக்கு சிகிச்சை மேற்கொள்ள தலை காயப் பிரிவு இல்லாமையால் ஏழையெளிய மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகவே, தலை காயப் பிரிவு மற்றும் M.R.I. Scan வழங்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் குறித்து உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2010 நவம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியில் உள்ள திருவாஞ்சியம், கொறடாச்சேரி ஆகிய பகுதிகளில் இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்கள்மூலமாக இயங்கக்கூடிய மருத்துவமனைகளில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு யூனியன்மூலமாகத்தான் ஊதியம் வழங்கப்படுகிறது. இப்போது, யூனியன்மூலமாக வழங்கப்பட முடியவில்லை என்பதற்காக அந்த மருத்துவமனைகளை மூடிவிட்டு அங்கே பணியாற்றுகின்றவர்களை யூனியன் அலுவலகத்தில் பணியாற்றும்படி செய்கின்றார்கள். இது தொடர்ந்து மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. இந்த மருத்துவமனைகள் கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலமாக இயங்கி வருகின்றன. இந்த மருத்துவமனைகள் நிரந்தரமாக இயங்க வேண்டுமென்று சொன்னால், ஆரம்பச் சுகாதார நிலையமாக அவற்றைத் தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கான வகையிலே அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற மருத்துவமனை உள்ளாட்சித் துறைமூலமாக நடத்தப்படக்கூடிய மருத்துவமனை. இதுசம்பந்தமாக இரண்டு துறை அதிகாரிகளும் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு முடிவுக்கு வந்த பிறகு, உள்ளாட்சித் துறையில் தொடர்ந்து செயல்படுவதா அல்லது மக்கள் நல்வாழ்வுத் துறையில் தொடர்ந்து செயல்படுவதா என்பது தெரிந்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் தற்பொழுது மாவட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிற அரசு மருத்துவமனை ஏற்கெனவே மிகவும்

2010 நவம்பர் 10]

பழுதடைந்த நிலையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களே அங்கே நேரில் வந்து அவற்றையெல்லாம் பார்வையிட்டு தற்பொழுது அதன் மராமத்துப் பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நடைபெறுகின்றன. அதற்காக நன்றி. சுமார் ஒரு இலட்சம் மக்கள்தொகை இருந்தபோது திருப்பூரிலே, ஒரு தாலுகா அளவிலே அந்த மருத்துவமனை உருவாக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது சற்றேறக்குறைய பத்து இலட்சம் மக்கள் திருப்பூரிலும், அதன் சுற்றுப்புறத்திலுமுள்ள பகுதிகளிலும் வசிக்கின்ற காரணத்தினால் இட நெருக்கடியும், போதுமான மருத்துவ வசதியும் கிடைக்காத நிலை இருக்கின்றது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஒரு புதிய மருத்துவமனைக்கான பரிந்துரை நம்முடைய துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை ஆய்வு செய்து, புதிய மருத்துவமனை அங்கு அமைவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்பேரில் நான் நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, அந்தக் கட்டடங்களில் பழுது நீக்கம் செய்யும் பணிகள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன. மேலும் புதிய கூடுதல் கட்டடங்கள் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நரம்பியல், கார்டியோ, சிறுநீரகம் தொடர்பான சிறப்புத் துறைகளைத் துவங்குவதற்கான வழிமுறைகள் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இப்போது நரம்பியல் துறையில் எம்.டி. பட்டம் பெற்ற 6

TRUTH ALONE TRIUMPHS

மருத்துவர்களும், கார்டியோ பிரிவில் எம்.டி. பட்டம் பெற்ற 30 மருத்துவர்களும், அதுபோல சிறப்பு மருத்துவர்கள் சிறுநீரகப் பிரிவிலும் இருக்கிறார்கள். இருக்கக்கூடிய மருத்துவர்களுக்கு சிறிய பயிற்சி அளித்து அவர்களை வைத்தே இந்தத் துறைகளை இயக்க அரசு முன்வருமா? ஏனென்றால் இவர்களில் பலர் வேறு மருத்துவமனைகளுக்கு, தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று இதே சிகிச்சையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களைப் பயன்படுத்தி உடனே இந்தத் துறைகளை இயக்க அரசு முன்வருமா என்று கேட்பதுடன், குழித்துறை அரசு மருத்துவமனைக்கு தலைக்காய சிகிச்சை மற்றும் விபத்துப் பிரிவு துவக்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி அரசு மருத்துவமனை கல்லூரிக்கு 2009 ஆம் ஆண்டில்தான் இந்திய மருத்துவக் குழுமத்தின் நிரந்தர அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்குப் பிறகுதான் புதிய முதுகலைப் பட்டப் பிரிவுகள் துவக்கப்படும். ஆக, இத்தகைய சிகிச்சை முறைகள், இருதய சிகிச்சை, சிறுநீரக சிகிச்சைத் துறை, நரம்பியல் பிரிவு போன்ற speciality பிரிவுகள் எல்லாம் பின்னர்தான் துவக்கப்படும். இத்தகைய துறைகள் துவக்குவதற்கு குறைந்தபட்சம் 30 படுக்கைகளுடன், இந்திய மருத்துவக் குழுமத்தின் விதிகளின்படி புதிய கட்டடம் கட்டவும், அவற்றிற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகள் வாங்கிடவும் மற்றும் தேவையான பேராசிரியர், உதவிப் பேராசிரியர், செவிலியர்கள் மற்றும் இதரப் பணியிடங்கள் ஒப்பளித்திடவும் ரூபாய் 8 கோடியிலிருந்து 10 கோடி வரை தொடரும் மற்றும் தொடராச் செலவினமாகத் தேவைப்படும். இத்தகைய நடைமுறையைக் கொண்டுவர இப்போது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 13 கோடி ரூபாய் செலவில் புற்று நோய்ப் பிரிவு தொடங்குவதற்கு ஆணையிட்டு இப்போது அப்பிரிவு வெகு விரைவில் துவக்கப்படவிருக்கிறது. இத்தகைய பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2010 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர் மாவட்டங்கள் இரண்டும் ஒன்றாக இருந்தபொழுது, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர் அரசு மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகவும், திருப்பூர் மாவட்ட முதன்மை மருத்துவமனையாகவும் செயல்பட்டு வந்தது. இப்பொழுது திருப்பூர் தனியாகப் பிரிந்த நிலையில் பொள்ளாச்சி மாவட்ட முதன்மை மருத்துவமனையாக அரசாணை வெளியிட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. பொள்ளாச்சி அரசு மருத்துவமனை என்பது தமிழகத்திலேயே அதிக நோயாளிகள் வருகிற முதன்மை வட்ட மருத்துவமனை. அந்தப் பொள்ளாச்சி வட்ட அரசு மருத்துவமனைக்கு மாவட்ட முதன்மை மருத்துவமனையாக ஆணை வழங்கியதோடு நிற்கின்ற பணியை, போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கி, தேவையான அனைத்து சிகிச்சைகளும் அங்கேயே பெறத்தக்க வகையில் செய்வதற்கு மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் ஆணை வழங்கப்பட்டது என்று அவர்களே கூறுகின்றார்கள். படிப்படியாக அதைச் செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

17—

பயிற்சிப் பள்ளி

***84304—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—